www.tamilarangam.net

7

# அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### உமாவின் பாத்திரம்

திரு.பிரபாகரனை பொலிசார் தேடிக்கொண்டிருந்தபோதும் அவரது தோற்றத்தை அடையாளம் காணும் புகைப்படம் எதுவும் பொலிசாரிடம் இருக்கவில்லை.

அதனால் பிரபா கொழும்புக்கு வருவது சுலபமாக இருந்தது.

1978ம் ஆண்டு கொழும்பில் பிரபாகரனுக்காக காத்திருந்தவர் திரு. உமா மகேஸ்வரன்.

நில அளவையாளராகக் கொழும்பில் கடமையாற்றியவர் திரு.உமா மகேஸ்வரன்.

கியூ வரிசைகளில் இளைஞர்கள் காத்திருப்பார்கள்.

தமது வீரத் தலைவர்களுக்கு கைகளை பிளேட்டால் கீறி இரத்தப் பொட்டு வைப்பதில் போட்டி போட்டு முண்டியடிப்பார்கள்.

தலைவர்கள் தடுக்கமாட்டார்கள். 'கத்தியின்றி இரத்தம் இன்றி யுத்தம் ஒன்று நடத்துவதே நமது நோக்கம். இரத்தப் பொட்டு வைப்பது அகிம்சையை கறைப்படுத்தும்' என்று எந்தவொரு தலைவரும் அன்று சொன்னதே கிடையாது.

இதனை ஏன் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது என்றால், தற்போது கூட்டணித் தலைவர்கள் சிலர் கேட்கிறார்கள், "நாங்களா ஆயுதம் ஏந்தச் சொன்னோம்? நமது வழி அகிம்சை என்று நாடே அறியும் அல்லவா?" என்று கேட்கிறார்கள்.

இன்றைய கூட்டணியில் உள்ளவர்களில் திரு.மாவை சேனாதிராஜாவுக்கு மட்டும்தான் தீவிரவாத குழுக்களோடு கூட்டணி நடத்திய பேச்சுக்கள் பற்றியும், உறவு பற்றியும் தெரிந்திருக்கும்.

சாந்தன், யோகேஸ்வரன் ஆகிய மூவரும் கியூபா மாநாட்டில் கலந்துகொண்டனர்.

கியூபா மாநாட்டில் காசி ஆனந்தன் வாசித்த கவிதையில் சில வரிகள்-

**"நாங்கள் இதழ்கள் உள்ள பறவைகள்**
**ஆனால் பாட முடியவில்லை.**
**நாங்கள் சிறகுகள் உள்ள பறவைகள்**
**ஆனால் பறக்க முடியவில்லை.**
**நாங்கள் அடிமைகள்..."**

கியூபா மாநாட்டில் புலிகள் சார்பாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் இருந்த கையொப்பம் உமா மகேஸ்வரனுடையது.

இளைஞர் பேரவையினர் என்று இலங்கை அரசை ஏமாற்றி கூட்டணியினர் புலிகள் மூவரை 1978ல் கியுபாவுக்கு

# கியூபாவுக்கு கூட்டணி அனுப்பிய புலிகள்!

## இரத்த திலகமிட்ட இளைஞர்களும் தலைவர்களின் புன்னகையும்!

தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையிலும் தீவிரமாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

உமா மகேஸ்வரன் பின்னர் புளொட் அமைப்பின் செயலதிபராக இருந்தவர் என்பது பரவலாக தெரிந்த விசயம்.

பரவலாக அறியப்படாத விசயமும் ஒன்று இருக்கிறது. சிலருக்கு அதிர்ச்சியாகவும்கூட இருக்கலாம்.

தமிழ் புதிய புலிகள் (T.N.T.) இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாக மாறியபோது ஐந்துபேர் கொண்ட செயற்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

அந்த செயற்குழுவில் பிரபாகரனும் அங்கம் வகித்தார்; முக்கியமானவராக இருந்தார். ஆனால் செயற்குழுவின் தலைவராக இருந்தவர் உமா மகேஸ்வரன்.

1977ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் புலிகளுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் கலந்துகொண்டவர் 'தளபதி' அமிர்தலிங்கம்.

புலிகளில் மட்டுமல்ல. அக்காலகட்டத்தில் இயங்கிய சகல தீவிரவாத தமிழ் குழுக்களில் இருந்த சகல இளைஞர்களின் விபரமும் அவருக்குத்தெரியும்.

திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும் 1977 பொதுத்தேர்தலில் இரத்தப் பொட்டு வைக்கப்பட்டவர்தான்.

### காந்திகளின் கோபம்

கூட்டணியில் இன்றுள்ள திரு.ஆனந்த சங்கரி கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.

இவரது வீட்டில்தான் பரந்தன் ராஜன் போன்ற தீவிரவாத இளைஞர்கள் நடமாடினார்கள்.

தமக்கு செல்லப்பிள்ளைகளாக இருந்த வரையும் தீவிரவாத இளைஞர்களைப் பார்த்து தலைவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

தங்களைப் பார்த்து கேள்வி கேட்க ஆரம்பித்தபோதும், தங்கள் கட்டுப்பாட்டை மீறி இளைஞர்கள் தனிவழி சென்றபோதும் மட்டும் தலைவர்கள் 'காந்தி'களாக மாறி விட்டார்கள்.

'சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது' என்று போதிக்கத் தொடங்கினார்கள்.

வேளாண்மை தங்கள் வீடுகளுக்கு வந்து சேரும் என்றால் இந்தக் காந்திகள் தீவிரவாத இளைஞர்களைக் கட்டியணைத்துக் கொண்டே இருந்திருப்பார்கள்;

சிறு பிள்ளைகளை சிங்கக் குட்டிகள் என்று சிரசு தொட்டு வாழ்த்தியிருப்பார்கள்.







அனுப்பியது அகிம்சைக்கு ஆரத்தி எடுக்கத்தான் என்று சொன்னால் விழுந்து சிரிக்கத்தான் வேண்டும்.

கூட்டணித் தலைவர்கள் காந்தியின் அகிம்சையை மறந்தது பற்றி வருத்தமில்லை. ஆனால் காந்தி சொன்ன சத்தியத்தையும் மறந்துவிட்டு பேசுவதுதான் வருத்தமாக இருக்கிறது.

வேண்டும்.

ஆனால் கூட்டணி உட்கட்சிப் பூசலால் முஸ்லிம்களை மறந்தது. இரண்டு தமிழ் வேட்பாளர்களை நிறுத்தியது. ஆனால் வெற்றி பெற்றது இராசதுரைதான்.

இராசதுரை தீவிரமாக இயங்கவில்லை என்ற குறை இளைஞர்களிடம் அப்போது இருந்தது உண்மை.

தினசரிகளின் நெற்றியில் ஒரு செய்தி.

**"பொத்துவில் கனகருக்கு துப்பாக்கிச் சூடு!"**

**பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கனகரத்தினம் இனம் தெரியாத இரு இளைஞர்களால் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து சுடப்பட்டார்.**

**திரு.கனகரத்தினத்திற்கு நெஞ்சிலும், வலது காதிலும், முதுகிலுமாக மூன்று சூடுகள் மட்டுமே பட்டதாக தெரிவிக்கப்படுகிறது."**

பத்திரிகைச் செய்திகளைப் படித்த மக்கள் அது கூட்டணி இளைஞர்களின் வேலை தான் என்று நினைத்துக் கொண்டனர்.

கூட்டணியினர் கண்டிப்பது என்பது மக்களைப் பொறுத்தவரை ஒரு புத்திசாலித்தனமான நடவடிக்கையாகவே கருதப்பட்டது. உண்மையும் அதுதான்.

கனகர்மீது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் பங்குகொண்ட்வர்கள் இருவர். ஒருவர் பிரபாகரன்; மற்றவர் உமா மகேஸ்வரன்.

கனகரத்தினம் மீதுவைத்த குறி தப்பியது. அவர் உயிர் தப்பிக்கொண்டார்.

எனினும் சூடுபட்ட காயங்கள் காரணமாக பின்னர் அவர் மரணமானார்.

அமுதர் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவான ஒருவராகவே தீவிரவாத இளைஞர்கள் பலரால் கருதப்பட்டார்.

அமுதரும் அந்த கருத்துக்கு ஏற்பவே நடந்துகொண்டார்.

தந்தை செல்வா காலத்தோடு அகிம்சை வழியில் மட்டுமே பிரச்சனைகளைத் தீர்க்கும் காலகட்டம் முடிந்துவிட்டது.

தளபதி அமுதர் தலைமையில் ஆயுதப் போர் மூளும் என்று இளைஞர்கள் நம்பினார்கள்.

77ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தை அடுத்து அமுதர் பொதுக் கூட்டங்களில் ஆவேசமாகப் பேசினார்:

"தமிழர்கள் சிங்களப் படைகள் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர். தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள தமிழர்கள் தமக்கென்று ஒரு சொந்தப் படையை உருவாக்கிக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டுவிட்டது."

கரகோசம் வானைப் பிளக்கும்.

### இரத்தத் திலகம்

அமுதர் உட்பட மு. சிவசிதம்பரம் போன்றவர்களும் அமர்ந்திருந்த பொதுக் கூட்ட மேடைகளில் கவிஞர் காசி ஆனந்தன் பேசுவார்:

"பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் போல் இங்கும் ஓர் இயக்கம் உருவாகும். அது வானை அதிரவைக்கும்."

தலைவர்கள் புன்னகைத்தபடி இருப்பார்கள்.

பொதுக்கூட்ட மேடைகளில் நீண்ட

திரைமறைவில் நடந்தவற்றை இந்தத் தொடரில் சொல்லும்போது 'உண்மை தானோ?' என்று சிலருக்கு சந்தேகம் வரலாம்.

அதனால்தான் பகிரங்கத்தில் நடந்த நடைமுறைகளில் இருந்தும் எடுத்துக்காட்ட வேண்டி ஏற்பட்டது.

இனி திரைமறைவில் நடந்தவற்றுக்கு செல்வோம்.

### கூட்டணி அனுப்பிய புலிகள்

1977ம் ஆண்டு கூட்டணியின் செயலதிபர் அமுதரோடு நடந்த பேச்சுவார்த்தையில் புலிகளின் சார்பில், உமா மகேஸ்வரன், பிரபாகரன், நாகராசா, விச்சுவேஸ்ரன் போன்றோர் பங்குகொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு தலைமறைவு இயக்கமாக செயற்படுவது என்றும்,

கூட்டணியினர் நிதி மற்றும் ஆயுத உதவிகளை பெற்றுக்கொடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அமுதர் ஒப்புக்கொண்டார்.

1978ம் ஆண்டு கியூபா நாட்டில் 'இளைஞர் மாணவர் மாநாடு' ஒன்று நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஐந்து பேரை அந்த மாநாட்டுக்கு அனுப்பி வைத்தது.

தீவிரவாதத்தை என்றுமே தாம் ஆதரித்தது கிடையாது என்று இன்று சொல்லும் கூட்டணியினர் அன்று அனுப்பிவைத்த ஐந்து பேரில் மூன்றுபேர் புலிகள்.

தமிழ் இளைஞர் பேரவை சார்பில் மாவை சேனாதிராஜா, காசி ஆனந்தன் ஆகியோரும், புலிகள் சார்பாக, சிங்கநாயகம்,

### கட்சிமாறிய பட்சி

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கூட்டணி அறிமுகப்படுத்திய வேட்பாளர்களில் ஒருவர் திரு. கனகரத்தினம்.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் தொகுதியில் போட்டியிட்டு அவரும் தமிழ் ஈழம் அமைக்க ஆணை கேட்டார்.

நல்ல விசயம். தமிழ் ஈழத்தை அமையுங்கள் என்று கூட்டணியினரை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்தார்கள் வாக்காளப் பெருமக்கள்.

கனகரத்தினமும் தெரிவானார். போராட்ட வரலாற்றில் அனுபவமும், ஈடுபாடும் உள்ள பலர் இருக்க கனகரை வேட்பாளராக நியமித்தபோதே அதிருப்தி எழுந்தது.

'வடலி வளர்த்தவர்கள் யாரோ பயனை அனுபவிப்பது யாரோ' என்ற கதையாக எம்.பி.பதவி கிடைத்தது கனகருக்கு.

அவரிடம் பணம் இருந்தது. அதுதான் தகுதி.

கூட்டணியில் ஊறி வளர்ந்த திரு. இராசதுரை வெற்றி பெறுவதைக்கூட அமுதரால் சகிக்க முடியாதிருந்தது.

போட்டிக்கு காசி ஆனந்தனையும் மட்டக்களப்பில் நிறுத்தினார்.

இராசதுரை உதயசூரியன் சின்னத்திலும் காசி ஆனந்தன் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்திலும் போட்டியிட்டனர்.

அப்போது மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதி.

நியாயமாக ஒரு தமிழரும், ஒரு முஸ்லிம் உறுப்பினருமாக இருவர் தெரிவாக

ஆனால், இராசதுரைமீது தீவிரம் காணாது என்ற கோபம் கூட்டணிக்கு இருந்திருந்தால் கனகரத்தினம் என்ற போராட்ட அனுபவம் அற்ற ஒருவரை பொத்துவிலில் எப்படி நிறுத்த முடிந்தது?

தேர்தல் முடிந்தது. பொத்துவில் கனகர் குத்துக்கரணம் அடித்தார்.

கட்சியை வளர்த்திருந்தால் அல்லவா கட்சி விசுவாசம் இருந்திருக்கும்? தவறு கனகர் மீதல்லவே. தவறான ஒருவரை தெரிவு செய்தவர்கள் மீதுதானே!

ஆனால், கூட்டணியினர் கனகர் துரோகி என்றார்கள்.

அப்போது கூட்டணியின் குரலாக வெளிவந்த 'சுதந்திரன்' பத்திரிகை தனது முன் பக்கத்தில் சவப்பெட்டிக்குள் கனகர் இருப்பதுபோல் கருத்துப்பட அவரது படத்தை வெளியிட்டது.

"பொத்துவில் கனகரத்தினம் குத்துக்கரணம். ஐ.தே.கட்சியில் சேர்ந்துவிட்டார்" என்று செய்தி போட்டது சுதந்திரன்.

மன்னார் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் திரு.சூசைதாசன்.

கனகர் கட்சிமாறிய பின்னர் யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. சூசைதாசன் நன்றாகப் பாடக்கூடியவர். அவர் மேடையில் பாடியது இது;

**"போகாதே போகாதே என் கனகா**
**பொல்லாத சொர்ப்பனம்**
**நானும் கண்டேன்"**

கூட்டத்தினர் இரசித்துச் சிரித்தார்கள். சூசைதாசன் என்ன சொல்கிறார் என்று மக்கள் புரிந்துகொண்டனர்.

1978ம் ஆண்டு 28ம் திகதி காலையில்

உமா மகேஸ்வரன் சரியாக ஒத்துழைக்காத காரணத்தால் குறி தப்பியதாக புலிகள் தற்போது தமது உறுப்பினர்களுக்கு நடத்தும் வகுப்புக்களில் கூறி வருகின்றனர்.

பொலிசார் வலை விரித்து தேடினார்கள். பிரபா தப்பி யாழ்ப்பாணம் சென்றார்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஓர் உயரமான இளைஞர் சம்பந்தப்பட்டதாக பொலிசாருக்கு ஒரு தகவல் கிடைத்தது.

அவர்கள் மாவை சேனாதிராசாவைப் பின்தொடர்ந்தார்கள். இளைஞர் பேரவைத் தலைவராக இருந்த மாவை சேனாதிராசா உயரமாக இருந்தமையால் ஏற்பட்ட சந்தேகம் அது.

கொலை முயற்சியில் ஈடுபட்டவர்கள் குறித்து பின்னர் பொலிசார் ஓரளவு விபரம் அறிந்தனர்.

### பஸ்தியாம்பிள்ளை குழுவினர்

பொத்துவில் கனகர் கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களை வளைத்துப்பிடிக்கவும், தீவிரவாத இளைஞர்களை மடக்கிப் பிடிக்கவும் யாழ்ப்பாணத்தில் ஒரு பொலிஸ் குழு தயாரானது.

அதன் தலைவர் சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை.

பஸ்தியாம்பிள்ளை தனது குழுவினருடன் 07.04.78 அன்று ஒரு தேடுதல் வேட்டைக்குப் புறப்பட்டார்.

தாம் எங்கே போகிறோம் என்று சக அதிகாரிகளுக்கு அவர் கூறவில்லை.

அது ஏன்? காரணம் இல்லாமல் இல்லை.

(தொடர்ந்து வரும்)

## எக்ஸ்ரே ரிப்போர்ட் (தொடர்ச்சி)

வேண்டிய அவசியம் இருக்கிறது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் புலிகளே என்பதையும், புலிகள் அரசியல்-இராணுவ சக்தி என்பதையும் நடைபெறும் பேச்சுக்கள் வெளிப்படுத்திக்காட்டும்.

ராஜீவ் காந்தி கொலையோடு பிரபாவை தேடப்படும் ஒருவராக இந்தியா அறிவித்திருக்கிறது.

அதன் மூலம் பிரபா ஒரு குற்றவாளி என்று இந்தியா மறைமுகமாக சுட்டிக்காட்டி நிற்கிறது.

பேச்சுவார்த்தைகள் எப்படி முடிந்தாலும், அதன் முடிவில் யாசீர் அரபாத்-நெல்சன் மண்டேலா போன்றவர்களுக்கு இணையான ஒருவராக (வெறுமனே இராணுவக் கண்ணோட்டம் கொண்ட ஒருவராக கருதப்படாமல்) அரசியல் தலைமைத்துவம் கொண்டவராக பிரபா வெளியுலகில் அடையாளம் காட்டப்படவும் பேச்சுவார்த்தைகள் உபயோகமாகும்.

அதனைத்தான் பேச்சுவார்த்தையின் மூலம் செய்யக்கூடிய அதிகபட்ச அரசியல் ஆதாயமாக புலிகள் நினைப்பதாகத் தெரிகிறது.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் தீர்வுத் திட்டம் ஒன்றை அரசால் முன்வைக்க முடியாமல் போனால் இறுதியில் புலிகளிடம் பொல்லைக்கொடுத்துவிட்டு திரும்பி வர வேண்டியிருக்கும்.

வேறு நெருக்கடிகள் காரணமாக இனப்பிரச்சனை விவகாரத்தை ஆறப்போட்டு தீர்வு காணலாம் என்று அரசு முயலுமானால், தமிழர்களது நம்பிக்கையையும் அரசும் ஜனாதிபதியும் இழக்கவேண்டி ஏற்படும். அதுமட்டுமல்ல சந்திரிக்கா மீதான தமிழர்களது நம்பிக்கையே சிங்கள தலைவர்கள் மீதான கடைசி நம்பிக்கையாக மாறவும் வழி ஏற்படும்.

இனப்பிரச்சனை தீர்வுக்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை ஐ.தே.கட்சி தற்போதைக்கு பெரும் கண்டனத்திற்கு உள்ளாக்காது என்பதுதான் அரசாங்கத்திற்கு ஆறுதலான விசயம்.

# கடைசிக் கடிதம்

**புலிகள் அமைப்பின் தலைவர் திரு.வே. பிரபாகரன் தனது உறுப்பினர்களை எவ்வாறான உணர்வுகளோடு உருவாக்கியுள்ளார் என்பதற்கு இக்கடிதம் ஓர் உதாரணமாகும். பூநகரி இராணுவ முகாம் மீதான தாக்குதலில் பலியான புலிகள் அமைப்பின் பெண் போராளி துளசிராவால் எழுதப்பட்ட கடிதம் இது:**

தமிழீழம்
1993.07.19

என்றும் என் அன்பின் நண்பிக்கு,

எங்களுக்கு வேவு எடுக்கும் வாய்ப்புத் தரப்பட்டதையிட்டுப் பெருமைப்படுகிறேன். தமிழீழ வரலாற்றில் மகளிர் வேவு அணியின் சாதனை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். என் உடலிலிருந்து உயிர் பிரியும்வரை இதற்காகப் பாடுபடுவேன்.

நான் பூநகரி மண்ணில்தான் விதையாகிறேனோ, தெரியாது. சுதந்திரத் தமிழீழ விடியலை என் கண்களால் கண்டு மகிழவேண்டும். என் அன்னையின் வளர்ச்சியை- அவளின் எழுச்சிக் கோலத்தை என் கண்களால் பார்க்க வேண்டும். இது நிறைவேறாது போகலாம். நண்பி, நான் இறந்தால் என் கண்களை பார்வை இழந்த ஒரு போராளிக்குப் பொருத்தச் சொல்லுங்கள். அதன்மூலமாவது என் தமிழீழத் தாயின் சுதந்திர விழாவைக் காணுவேன்.

இப்படிக்கு
துளசிரா (கப்டன் துளசிரா)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்